**CHAPTER XXV, CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE**

SESSIONS CASE NO.97/2015

Deposition of Witness for prosecution: P.W. **19**

| | | | |
|---|---|---|---|
| **Name** | Ananad Babu | **Caste** | |
| **Father's Name** | | **Calling** | |
| **Age** | | **Religion** | |
| **Village** | | **Taluk** | |

Tmt.M.Latha, Translator, Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872
on **.2019.**

மனுவின் பெயரில் சாட்சி மீண்டும் வரவழைகக்கப்பட்டு எதிரிசார்பில் குறுக்கு விசாரணை—

பிரேதவிசாரணை அறிக்கையில் நான் தான் பிரேத விசாரணை செய்த ஆய்வாளர் என்று கையொப்பம் போட்டுள்ளேன். பிரேத விசாரணை அறிக்கையில் நான் 18.15 மணிக்கு தான் அந்த இடத்திற்கு மணிக்கு நான் வந்ததாகவும் 20.15 மணிக்கு தான் பிரேத விசாரணை முடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரேத விசாரணை 18.18 மணிக்கு சம்பவஇடத்தில் துவங்கி 20.18 மணிக்கு அந்த இடத்தில் முடிக்கப்பட்டது அதற்கு முன்பே அற்த இடத்திற்கு வந்துவிட்டேன். நான் பிரேதவிசாரணை அறிக்கையை தயார் செய்துகொண்டிருக்கும் போது அதற்கு முன்பே கோயம்பேடு ஆய்வாளர் அந்த இடத்திற்கு வந்து விட்டார் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்யும் போது எந்த வித பொருளும் கைப்பற்றுவதற்கு முன்பே எதிரிகள் தான் கொலை செய்தார்கள் என்ற முடிவுக்கு வந்து விட்டேன் என்றாலும் அது விசாரணைக்கு பின்பே தெரியும் என்றாலும்

சரியல்ல. பிரேதவிசாரணையில் நான் முன்கூட்டியே முடிவு செய்து கொண்டு விசாரணை தொடங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதே போன்று சுதந்திரமான பஞ்சாயத்தார்களாக இருந்திருந்தால் அவ்வாறு முடிவுக்கு வந்திருக்க முடியாது என்றாலும் அங்கிருந்த பஞ்சாயத்தார்கள் இந்தவரின் உரவினர் மற்றும் தெரிந்தவர்கள் என்று சொன்னால் சரியல்ல. குற்றம் சாட்டப்பட்வர்கள் பெயரை பஞ்சாயத்தார்களுக்கு தெரிவித்ததால் தான் அவர்களும் அதை ஒப்புக்கொண்டு கையொப்பம் போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. விசாரணைக்கு பிரகே அந்த குற்றம் செய்தவர்கள் பற்றிய விவரம் தெரியவரும் என்றாலும் ஆனால் இந்த வழக்கில் விசாரணை தொடங்கும் போதே எதிரிகள் பெயரை கூறி தொடங்கியுள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. அனைத்து சாட்சிகளையும் விசாரணை செய்த பிறகு தான் நானும் பஞ்சாயத்தாரும் அந்த முடிவுக்கு வந்தோம். காசி விஸ்வநாதன் முதலில் பார்திருந்தால் விவரம் தெரிந்த அவர் முதலில் காவல்நிலையத்திற்கு தான் சொல்லியிருப்பார் என்றாலும் அவர் வி.ஏ.ஓவிற்கு சொன்னதாக நான் வாக்குமூலம் கொடுத்ததாக தெரிவிக்கும் நிலையில் காசிவிஸ்வநாதன் கௌன்சிலருக்கு தான் முதலில் தெரிவித்ததாக சொல்கிறார் என்றாலும் அவரை விசாரிக்காமல் நானாக வாக்குமூலம் எழுதிக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. பிரேதவிசாரணை அறிக்கையில் காலம் 8ல்பிளாட் எண் எழுதாமல் உள்ளது என்றாலும் அதை அந்த இடத்தில் வைத்து தயார்செய்து இருந்தால் பிளாட் எண் எழுதியிருப்பேன் என்றாலும் நான் காவல் நிலையத்திலேயே தயார் செய்ததால் தான் பிளாட் எண் எழுதாமல் வெற்றிடமாக விட்டு ல் மட்டும் போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரேத விசாரணை காலம் 5 லும் அளவு சொல்லாமல் வெற்றிடமாக விட்டுள்ளேன் என்றாலும் நான் அந்த இடத்தில் பார்திருந்தால் அளந்து எழுதியிருப்பேன் என்றாலும் சரியல்ல. பிரேதம்

எரித்ததற்கு பெட்ரோல் பயன்படுத்தியதாக தடைய அறிக்கையில் இல்லை என்றாலும் விஏ.ஓ கூறியதாக நானாகவே பெட்ரோல் உற்றி எரித்ததாக தயார் செய்து கொண்டோம் என்றாலும் சரியல்ல. பெட்ரோலா இல்லையா என்பது குறித்து விஏஓவால் சொல்லமுடியாது என்று சொல்லமுடியாது என்று சொன்னால் சரியல்ல. தின சரி பயன்படுத்தும் பொருள் என்பதால் அவரால் சொல்ல முடியும். பிரேதவிசாரணை அறிக்கையில் ஒரு இடத்தில் குப்பை கூலங்கள் இ-ருந்ததாக சொல்லியுள்ளேன் எனறாலும், அங்கு சக்திமசாலா மற்றும் ஆச்சி மசாலா கவர் கிடப்பது ஆச்சரியமானது என்றாலும் சரியல்ல. சம்பவஇடத்தில் மிளகாய் பொடி தூவப்பட்டிருந்தது. சம்பவ இடத்தில் கிடைக்ககூடிய பெட்ரோல் மற்றும் ஆச்சிமசாலாகவர் மற்றும் சக்திமசாலாகவர் குறித்தும் தடய அறிவியல் துறைதான் சொல்ல முடியும் என்றாலும் TOX ரிபோர்ட் எங்களுக்கு கொடுக்காததால் அதை நீதிமன்றத்தில் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல. மேற்கூறிய 2 ஆவணங்களும் எதிரிகளுக்கு மிக முக்கிய ஆவணங்கள் என்றாலும் அதை வழங்காததால் அந்த ஆவணங்களை நீதிமன்றம் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல. இது பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல